தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1978 மார்ச் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்— விடைகள்

ஊடுக்குறியிட்ட வினாக்கள்.

சிதம்பரம் வட்டத்தில் நிலத் தீர்வை வசூல்.

*4 குறுகிய கால வினா. திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர்— கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு கண்டு முதலை அடிப்படையாக வைத்து நிலத்தீர்வை ரத்து செய்யப் பட்டுள்ளதாக அரசு அறிவித்திருந்தும் சிதம்பரம் வட்டத்தில் அதிகாரிகள் கெடுபிடி செய்து நிர்பந்தமாக தீர்வையை வசூல் செய்வது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் 561 கிராமங்கள் அடங்கியுள்ளன. அவைகளில் 110 கிராமங்கள் மட்டுமே வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவை என்று அரசால் அறிவிக்கப்பட்டவையாகும். அந்தக் கிராமங்களில் அரசு அறிவித்திருந்த நிலத் தீர்வை தள்ளுபடி சம்பந்தப்பட்ட சலுகைகள் கிட்டும். மற்ற கிராமங்களுக்கு இச் சலுகைகள் பொருந்தா. அந்த கிராமங்களில் அரசுக்கு சேரவேண்டிய நிலவரி வசூலில் தீவிர நடவடிக்கை எடுக்கப் படுவது நியாயமே. உறுப்பினர் அவர்களின் வினாவில் எந்த கிராமத்தின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. வினா பொதுவாக உள்ளது. புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் என்று அறிவிக்கப்பட்ட கிராமங்களில் அலுவலர்கள் கெடுபிடி செய்து நிர்பந்தமாக தீர்வையை வசூல் செய்கின்றனர் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு சி. கோவிந்தராசன்: 110 கிராமங்கள் தவிர இதர கிராமங்களுக்கு இந்த விதிவிலக்கு கொடுக்கப்பட வில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்களுக்கு

[1978 மார்ச் 22

நன்கு தெரியும். அவர்கள் அந்த இடங்களுக்கு விஜயம் செய்து பார்த்திருக்கிறார்கள். அநேகமாக சிதம்பரம் தாலூகா முழுவதும், ஒரு பக்கம் கொள்ளிடக்கரை பிரதேசம்; மறு பக்கம் சமுத்திரக்கரை பிரதேசம் என்று இருக்கும்போது 110 கிராமங்கள் அல்ல: 300, 400 கிரமங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது ஒரு விஷயம்.

இரண்டாவதாக, இந்த 37 பைசா கண்டு முதலானதற்கு விதி விலக்கு என்றிருக்கிறது. இதை நிர்ணயிப்பது யார்? அதற்கு வேண்டிய உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா?

அடுத்து, இதை நிர்ணயம் செய்யாமலேயே அந்த இடங்களுக்குச் சென்று தீர்வை வசூல் செய்வதில் கெடுபிடி, நிர்பந்தம் காட்டுகிறார்கள். ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? எவ்வளவு கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை வினாக்களைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேற்கொண்டு பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இருக்குமானால் அதுபற்றி அரசுக்கு எழுதியனுப்பலாம் 37 பைசா என்பது வருவாய் துறை அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவித்து பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் அப்படி அறிவிக்கப்படாமலேயே நடவடிக்கைகள் சென்னையில் கூட, ஆவடிப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் பிராவிடண்ட் பண்ட், ஸி.டி. போன்றவற்றிலிருந்து பணம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்காமலேயே கொடுத்திருக்கிறார்கள். அவைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப் படவில்லை. ஏற்கனவே வேண்டுகோள் விடுத்தும் அரசாங்கம் கருதுகிறதே தவிர அறிவிக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எந்தெந்தப் பகுதிகளை நோட்டிபிகேஷன் செய்ய வேண்டுமென்பதற்கான அதிகாரம் சட்டத்திலே இருக்கிறது. அரசாங்கம் அறிவிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் பாதிக்கப்படவில்லை அந்தப் பகுதிகள் என்று கருதுவதால் இருக்கலாம்.

திரு. சி. கோவிந்தராசன்: முன்னமேயே கூறினேன். 110 கிராமங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் எவ்வளவு கிராமங்கள் என்று கேட்டால் எழுதித் தர

1978 மார்ச் 22]

தயாராயிருக்கிறேன். எவ்வளவு கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அரசு பிரகடனப்படுத்த வேண்டும். அந்த இடங்களில் கெடுபிடி வசூல் நடக்கிறது. 17—3—1978ல் கூட பலயிடங்களில் விவசாயிகள் உண்ணு விரதம் இருந்திருக்கிருர்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்த அடிப்படையில் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக அந்த உண்ணுவிரதம். ஆகவே எந்தெந்த கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பிரகடனப்படுத்தப்படுமா? அதோடு கூட இந்த கெடுபிடி வசூலை உடனடியாக நிறுத்தி வைக்க அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்ணுவிரதம் இருக்கிருர்கள் என்ற தகவல் தெரியுமா என்று கேட்டார்கள். எனக்கு அந்தத் தகவல் தெரியாது. சிதம்பரம் வட்டத்தைப் பொறுத்த வரையில், 341 கிராமங்கள் மொத்தம் இருக்கின்றன. அவற்றில் 110 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவையென்று அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கருத்து சொல்கிருர்கள். அதை, பொதுவாகச் சொல்வதை விட எந்தெந்த கிராமங்கள் என்று குறிப்பாகச் சொல்வார்களேயானுல் அது அரசுக்கு நல்லது. கெடுபிடி வசூல் அல்ல, மற்றக் கிராமங்களில் ஏற்கனவே விதிக்கப்பட்ட நிலவரி அதற்கு மேல் தண்ணீர் வரி போன்றவைதான் வசூலிக்கப்படுகிறது.

திரு கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்கள் என்று பல்வேறு இடங்களில் அறிவிக்கப்பட்டிருந்தும், கடன்கள் தள்ளுபடி செய்யவோ, ரத்து செய்யவோ செய்யப்படவில்லை என்பதும் இப்போது சம்பா, தாளடிக்கு முன்பாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற அதிகாரிகள் கடனை வசூலிப்பதற்கு கெடுபிடி செய்கிருர்கள். ஆகவே இது பற்றி மறு பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தால் அங்கெல்லாம் அதற்கென்று இருக்கின்ற சலுகைகைள் கிடைப்பதற்கு வழி ஏற்படும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தஞ்சை மாவட்டத்தை பற்றி கேட்கிருர்கள். அது பற்றி தனியாக விவரத்தைக் கேட்டால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.